மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகுவருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12-20

11. அரசினர் தீர்மானங்கள்.

(அ) 29—4—1993 அன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'கரண்ட்' இதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'கரண்ட்' இதழ் மீதான அவை உரிமைக் குழுவின்

]டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1993 ஏப்ரல் 29

அறிக்கை பேரவை விதி 229-அ-வின் கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். என்று மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் ஏதும் இல்லை. மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229-ன் கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக் கொள்கிறது'' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

12. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட

முன் வடிவு, 1993—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவுகள் ஆய்வு செய்தல், 28—4—1993 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று முன்மொழிந்த தீர்மானத்தின் மீது பதிலுரை—தொடர்ச்சி. மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, பேரவையின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு, அதன் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள், பொதுவான கருத்துக்கள் சிலவற்றை வழங்கி